செ.வெ.எண் – 169

22/2/2010.

<u>உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–5.</u>

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு, சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம்பருப்பு போன்ற பருப்பு வகைகள் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகளின் மூலம் விநியோகம் செய்து வருகிறது. இருப்பினும், மொத்தவிலை குறைந்த போதிலும் சில்லறை விலை குறையவில்லை என்பதை கருத்திற்கொண்டும் மக்களின் கூடுதல் தேவையை இன்னும் முழுமையாக பூர்த்தி செய்யவும் வசதியாக கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் நடத்தும் 200 கூட்டுறவு அங்காடிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் 21 அமுதம் பல்பொருள் அங்காடிகள் மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் 295 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்கள் மூலமாக துவரம்பருப்பு முதல் ரகம், துவரம்பருப்பு 2–ம் ரகம் மற்றும் கனடா பருப்பு ஆகியவற்றை சிறப்பு விற்பனை பிரிவுகள் மூலமாக பொது மக்களின் நலன் கருதி கட்டுப்பாடில்லாத பொருளாக அடக்க நியாய விலையில் விற்பனை செய்ய அரசு தீர்மானித்தது. அதன்படி துவரம்பருப்பு முதல் ரகம், துவரம்பருப்பு 2–ம் ரகம் மற்றும் கனடா பருப்பு முறையே கிலோ ரூ.65, ரூ.60 மற்றும் ரூ.50 என்ற விலையில் 27.01.2010 முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இச்சிறப்பு விற்பனை மூலம் தினசரி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் சராசரி ஒரு டன் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் 5 டன் என்ற அளவிலும் இத்திட்டம் துவங்கியது முதல் இதுகாறும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 15 டன் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் 137 டன்னும் பருப்பு வகைகள் விற்பனை செய்துள்ளன. இவ்விற்பனையின் மூலம் வெளிச்சந்தை சில்லறை விலை குறைந்ததையடுத்து இப்பருப்பு வகைகள் 03.02.2010 முதல் விலை மறுநிர்ணயம் செய்யப்பட்டு, கீழ்வரும் விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த விலைகள் இந்த வாரமும் மாற்றமில்லாமல் தொடரும்.

| | | |
|---|---|---|
| 1. | துவரம்பருப்பு முதல் ரகம் | கிலோ ரூ.63/– |
| 2. | துவரம்பருப்பு 2–ம் ரகம் | கிலோ ரூ.58/– |
| 3. | கனடா பருப்பு | கிலோ ரூ.48/– |

மேற்கண்டவாறு துவரம் பருப்பு கிடைப்பதில் ஏதேனும் சிரமங்கள்/புகார்கள் இருப்பின் மாநில நுகர்வோர் சேவை மையத்திற்கு (State Consumer –Helpline) தொலைபேசி, எண்.044–28592828–ல் அல்லது 28364858 அல்லது 28351514 தகவல் தெரிவிக்கலாம்.

ஆணையாளருக்காக